தமிழ் நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1974 ஏப்ரல் 20.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானங்கள்.

(அ) வினா நேரத்தைத் தள்ளி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவை விதி 22-இன்கீழ் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று இருப்பதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்து இருக்கும் 'இனம் 2—அறிக்கைகளை அளித்தல்' என்றுள்ளதை எடுத்துக்கொள்ளவேண்டும்".
என்று முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு நான் அறிவிப்பு கொடுத்திருந்தேன். இவை குறித்து நேற்றும் நான் தங்களிடம் கேட்டுக்கொண்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவை குறித்து அவையில் கேட்கக் கூடாது என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். தாங்கள் கொடுத்த தீர்மானங்களுக்கெல்லாம் முடிவு தெரிவித்துத் தங்களுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியன் : இதுவரையில் எனக்குத் தகவல் ஏதும் வரவில்லை.